அங்
Vol:VII No:8 London Friday June 14, 2002 Tel: 020-842



# மங்கள ஆரத்தி



படம்: சி. சிதம்பரப்பிள்ளை

உயர்வாயிற்குன்று முருகன் ஆலயத்துக்கு வருகைதந்த மகாராணி. ஆலய வாயிலில் மங்கள ஆரத்தியுடன் வரவேற்கப்பட்டார்.

மங்கள வாத்தியம் இசைக்க மகாராணியும் இளவரசர் பிலிப்பும் ஆலயத்துள் நுழைந்தனர். ஆலய தர்மகர்த்தாக்கள் அவர்களை வரவேற்றபின்னர். இருவருக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஆலயத்தில் விசேட பஞ்ச ஆரத்தியுடன் முருகனைத் தரிசித்த பின்னர் கல்யாண மண்டபத்தில் நிகழ்ந்த இசை, நடன நிகழ்ச்சியையும் மகாராணியும் இளவரசரும் பார்வையிட்டனர். ஆலய மண்டபத்திலும் கல்யாண மண்டபத்திலும் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தவர்கள் கூடியிருந்தார்கள்.

தன்னுடைய முடியாட்சியின் பொன்விழாக் கொண்டாட்டத்துடன் தொடர்பாக, பிரிட்டனில் அனைத்து மதங்களையும் அங்கீகரிக்கும் விதத்தில் இந்த இந்து ஆலயத்துக்கு மகாராணி இவ் விஜயத்தை மேற்கொண்டார்.

அரச விஜயத்தின்போது பிரிட்டனில் முதன்முதலாக மகாராணி தனது காலணிகளைக் கழற்றி, ஆலயத்தினுள் பிரவேசித்தார்.

அமைதிக்கும், நீண்ட வாழ்வுக்கும், ஆட்சிக்குமான ஆசிகளில் அவர் மகிழ்ந்தார்.

ஜூன் 6ஆம் தேதி அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

UPSLINKK B

ஜூன் 14, 2002 அஞ்சல்

# ஹைகேற் முருகன் ஆலயத்தில் எலிசபேத் மகாராணி



